சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Sabaragamuwa


வலயக் கல்விக் காரியாலயம் - தெஹியோவிற்ற

# வரலாறு

## தரம் - 10

## அலகு - 08

# கண்டி இராசதானி




S.சிவயோகராஜன்

கே/தெஹி/சபுமல்கந்த தமிழ் மகா வித்தியாலயம்

தெரணியகலை

# கண்டி இராசதானியின் பூகோள அமைவு

❖ கண்டி இராசதானி இயற்கையான பாதுகாப்பு அரண்களைக் கொண்ட இராசதானியாகும்.

- நீர் அரண்
- வன அரண்
- மலை அரண்

❖ வடகீழ் மற்றும் தென்மேல் பருவக்காற்றுக்கள் ஆகிய இரு பருவக்காற்றுக் காலங்களிலும் மழை பெறும் பிரதேசமாகும்.

❖ இரம்மியமான கால நிலையையும் வளமான பூமியையும் கொண்ட பிரதேசமாகும்.

❖ மத்திய மலை நாட்டில் அமைந்துள்ள இராசதானி ஆகும்.

**நீர் அரண்**

மகாவலி கங்கை



**வன அரண்**

உடவத்த,ஹந்தான,கன்னொறுவ





**மலை அரண் - கணவாய்கள்**

பலன,கன்னொறுவ,உன்னஸ்கிரிய



## கண்டி இராசதானியின் அமைவிடமும் கணவாய்களும்







## கண்டி இராசதானிக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்

- **செங்கடகல**
- **ஸ்ரீவரதனபுர**
- **மலைநாடு**
- **மகாநுவர**
- **பஞ்சமலை நாடு**

பஞ்சமலை நாடு →
- மாத்தளை
- தும்பரை
- உடுநுவர
- ஹரிஸ்பத்து
- ஹேவாஹெட்ட

கண்டி இராச்சியத்தின் தலை நகரம் - செங்கடகல

# கண்டியை தலைநகரமாக தெரிவு செய்தமை

கோட்டை இராசதானியின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சி காலத்தில் கண்டி இராச்சியம் கோட்டைக்கு அடிமைப்பட்ட பிராந்திய அரசொன்றாகச் செயற்பட்டது.

கண்டி இராச்சியத்தின் அருகிலுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தி, முதன் முதலில் கண்டி அரசொன்றை உருவாக்கியவன் சேனா சம்மத விக்கிரமபாகு ஆவான்.

- கம்பளை
- சிதுறுவான
- தெநுவர
- மாத்தளை
- பன்சிய பத்துவ
- பலவிட்ட
- ஊவா ஆகிய பிரதேசங்கள்

கண்டி இராச்சியத்தின் முதல் மன்னனாக சேனா சம்மத விக்கிரமபாகு கருதப்படுகின்றான்.

# கண்டி இராசதானி தனி இராச்சியமாகிய விதம்

## ஜோதிய இளவரசன்

- கோட்டையின் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சி காலத்தில் ஜோதிய இளவரசன் கோட்டை இராட்சிய மன்னனின் பிரதிநிதியாக கண்டியில் இருந்தான்.
- ஜோதிய கண்டி இராச்சியத்தை சுதந்திர அரசாக மாற்றுவதற்காக 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.
- கிளர்ச்சியை அடக்குவதற்கு அம்புலுகல குமாரன் அனுப்பப்பட்டான்.
- அம்புலுகல குமாரன் வெற்றிகரமாக கிளர்ச்சியை அடக்கினான்.

## சேனா சம்மத விக்கிரமபாகு

- ஜோதியவின் கிளர்ச்சியை அடக்கியதன் பின்னர் சேனா சம்மத விக்கிரமபாகு கோட்டை இராச்சிய கண்டி பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான்.
- 6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின் பின் பிரதிநிதி சேனாசம்மத விக்கிரமபாகு கிளர்ச்சி செய்து மலைநாட்டை கோட்டை இராச்சியத்திலிருந்து விடுவித்து தனி அரசென்றை உருவாக்கினான்.

### கண்டி இராச்சியத்தின் முதல் மன்னனான சேனா சம்மத விக்கிரமபாகு முதல் யமசிங்க பண்டாரன் வரை

சேனா சம்மத விக்கிரமபாகு

↓

| | |
|---|---|
| ஜயவீர பண்டார | சேனா சம்மத விக்கிரமபாகுவின் மகன், மாயாதுன்னையின் நண்பன் |
| ↓ | |
| கரலியத்த பண்டார | ஜயவீர பண்டாரனின் மகன் |
| ↓ | |
| யமசிங்க பண்டார | கரலியத்த பண்டாரனின் மருமகன் |
| குசுமாசன தேவி | கரலியத்த பண்டாரனின் மகள் |

---

| | |
|---|---|
| வீரசுந்தர பண்டார | கண்டி இராச்சிய பிரதானி |
| ↓ | |
| கோணப்பு பண்டார | வீரசுந்தர பண்டாரனின் மகன் |

## ஜயவீர பண்டாரன்

- சேனா சம்மத விக்கிரமபாகுவின் பின்னர் அவனின் மகன் ஜயவீர பண்டாரன் கண்டி இராசதானியின் அரசனானான்.
- இவன் கி.பி 1511 தொடக்கம் 1551 வரையில் கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்.
- இவன் சீதாவக்கை ஆட்சியாளன் மாயாதுன்னையின் நண்பனாவான்.
- கி.பி 1521 ஆம் ஆண்டு கோட்டை இராச்சியத்தில் இடம்பெற்ற 6 ஆம் விஜயபாகு கொலையின் (விஜயபாகு கொள்ளை) போது மாயாதுன்னைக்கு உதவி புரிந்துள்ளான்.
- இவனின் ஆட்சி காலத்தில் கோட்டை இராச்சியம்
  - கோட்டை
  - றைகம
  - சீதாவக்கை என மூன்று இராச்சியப் பிரிவுகளாகப் பிரிந்தன.

## கரலியத்த பண்டாரன்

- ஜயவீர பண்டாரனின் மரணத்தின் பின்னர் அவனது மகன் கரலியத்த பண்டார கண்டி இராச்சியத்தின் மன்னனானான்.
- இவன் போர்த்துக்கேயருக்கு உடன்பாடான கொள்கையை கடைபிடித்தான்.
  - போர்த்துக்கேயருடன் நட்புறவுடன் செயற்பட்டமை.
  - போர்த்துக்கேயரின் கலாசாரத்தை அனுசரித்தமை.

  போன்ற காரணங்களால் கண்டிப் பிரதானிகள் அதிருப்தியடைந்தனர்.
- இதனால் மலைநாட்டுப் பிரதானியான பேராதனையின் வீரசுந்தர பண்டார சீதவாக்கை ஆட்சியாளன் முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற உதவி புரிந்தான்.

## கரலியத்த பண்டாரனின் ஆட்சி காலத்தில் சீதாவக்கை மன்னன் 1 ஆம் இராஜசிங்கனின் கண்டி மீதான போர்கள்

### கி.பி 1574 ஆம் ஆண்டுப் போர்

- கி.பி 1574 ஆம் ஆண்டு சீதாவக்கை இராஜசிங்கனின் படை கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்து பலன கணவாயைக் கைப்பற்றியது.
- கண்டி அரசனின் உதவிக்கு போர்த்துக்கேயப் படை வந்தது.
- கண்டிப்படையினரால் சீதாவக்கைப் படையினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

### கி.பி 1582 ஆம் ஆண்டுப் போர்

- கி.பி 1582 இல் சீதாவக்கைப் படை கண்டி இராச்சியம் மீது தாக்குதலை மேற்கொண்டு கண்டியை கைப்பற்றியது.
- கண்டி இராச்சியத்தை தனது கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்த இராஜசிங்கன் இதன் பிரதிநிதியாக வீரசுந்தர பண்டாரனை நியமித்தான்.

## கி.பி 1582 ஆம் ஆண்டு சீதாவக்கையால் கண்டி ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர்

- கரலியத்த பண்டாரன்
  - மகள் - குசுமாசன தேவி
  - மருமகன் - யமசிங்க பண்டார ஆகியோருடனும் தனது அரச பரிவாரங்களுடன் மன்னாருக்குத் தப்பிச் சென்று போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தான்.

போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்த

குசுமாசன தேவி - டொனா கதறினா
யமசிங்க பண்டார - டொன் பிலிப்
எனும் பெயர்களுடன் ஞானஸ்தானம் பெற்று கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டனர்.

## வீரசுந்தர பண்டார

- கண்டி இராச்சியத்தை கைப்பற்றிய முதலாம் இராஜசிங்கன் சீதாவக்கையிலிருந்து கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்.
- கண்டிப இராச்சியத்தின் பிரதிநிதியாக வீரசுந்தர பண்டார நியமிக்கப்பட்டிருந்தான்.
- வீரசுந்தர பண்டாரனின் நடவடிக்கைகளில் சந்தேகப்பட்ட முதலாம் இராஜசிங்கன் அவனை தந்திரமான முறையில் கொலை செய்தான்.
- வீரசுந்தர பண்டார கொலை செய்யப்பட்டதன் பின்னர் அவனின் மகன் கோணப்பு பண்டார போர்த்துக்கெயரிடம் தஞ்சமடைந்தான்.

கோணப்பு பண்டாரன் - டொன் ஜுவான்
எனும் பெயருடன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டனர்.

## யமசிங்க பண்டார

- சீதவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கன் சைவசமயத்ததைப் பின்பற்றி பௌத்த சமயத்திற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தான்.
- இதனால் மலையகப் பிரதானிகள் சிலரிடையே மன்னன் மீது அதிருப்தி ஏற்பட்டது.
- இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தமக்குச் சார்பானவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்கு முயற்சி செய்தனர்.
- போர்த்துக்கேயரின் பாதுகாப்பில் இருந்த கோணப்பு பண்டார (டொன் ஜுவான்) தலைமையிலான படையுடன் கரலியத்த பண்டாரவின் மருமகனான யமசிங்க பண்டார (டொன்பிலிப்) கண்டி இராச்சியத்திற்கு அனுப்பப்பட்டான்.
- இவர்களால் மிக எளிதாக கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடிந்தது.
- மலை நாட்டுப் பிரதானிகள் சிலரின் ஆதரவுடன் யமசிங்க பண்டார (டொன்பிலிப்) கண்டி இராச்சியத்தின் அரசனாக நியமிக்கப்பட்டான்.
- போர்த்துக்கேயரின் பொம்மையாக செயற்பட்ட யமசிங்க பண்டார (டொன் பிலிப்) சிறிது காலத்தில் மரணமடைந்தான்.
- யமசிங்க பண்டாரவின் (டொன்பிலிப்) சிறுவயது மகனை அரசனாக்கி பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்க முயற்சி செய்தனர்.
- 1592 இல் மலை நாட்டவரின் ஆதரவை பெற்றுக்கொண்ட கோணப்பு பண்டார (டொன் ஜுவான்) போர்த்துக்கேயருக்கு எதிராக பதவியை பறித்துக்கொண்டு முதலாம் விமலதர்சூரிய என்ற பெயருடன் கண்டி இராச்சிய மன்னனானான்.
- முதலாம் விமலதர்மசூரியனின் துணிச்சலான நடவடிக்கையால் கண்டி இராசதானி போர்த்துகேயரின் ஆட்சியிலிருந்து கண்டி இராச்சியத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது.

# முதலாம் விமலதர்மசூரிய மன்னன் - (1592 – 1604)

- யமசிங்க பண்டாரவின் பின்னர் முதலாம் விமலதர்மசூரிய கண்டி இராச்சியத்தின் மன்னனானான்.
- இவன் கண்டி இராச்சியத்தில் புதிய தோர் அரச வம்சத்தை ஆரம்பித்து வைத்தான்.

## கண்டி இராச்சியத்தின் புதிய அரச வம்ச மன்னர்கள்

- முதலாம் விமலதர்மசூரிய.
- செனரத் மன்னன்.
- 2 ஆம் இராஜசிங்கன்.
- 2 ஆம் விமலதர்ம சூரியன்.
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்.

## முதலாம் விமலதர்மசூரியன் எதிர்நோக்கிய சவால்கள்

- சட்ட பூர்வ ஆட்சி உரிமை இல்லாமை.
- கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்து பாதுகாக்க வேண்டி இருந்தமை.
- கண்டி இராச்சியத்தை சீதாவக்கை இராச்சிய ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டி இருந்தமை.
- வீழ்ச்சியற்றிருந்த பௌத்த சமயத்தை மீளவும் எழுச்சியுறச் செய்ய வேண்டியிருந்தமை.
- கண்டி இராச்சியத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தமை.

## முதலாம் விமலதர்மசூரியனும் முதலாம் இராஜசிங்கனும்

- கி.பி 1592 இல் சீதாவக்கை இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தான்.
- சிறந்த வீரனான முதலாம் விமலர்மசூரிய அதனை முறியடித்தான்.
- முதலாம் இராஜசிங்கன் தோல்வியடைந்து திரும்பி வருகையில் பொத்தங்கொடையில் வைத்து மூங்கில் சிராய் குத்தியதால் கி.பி 1593 இல் இறந்தான்.

### முதலாம் விமலதர்மசூரியன் சட்ட பூர்வ ஆட்சியுரிமையை பெற்றுக்கொள்ளல்.

- கண்டி இராச்சியத்தின் ஆட்சுரித்தாளியான குசுமாசன தேவியை திருமணம் செய்து கொள்ளல்.
  - ✓ கி.பி 1592 இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயர் போர்தொடுத்தனர்.
  - ✓ இப்போர் தோல்வியடைந்தது.
  - ✓ கி.பி 1594 இல் போர்த்துக்கேயர் பேரோ லோபேஸ் டி சூசாவின் தலைமையில் பெரும் படையுடன் மீண்டும் கண்டி மீது போர் தொடுத்தனர்.
  - ✓ தமது கட்டுப்பாட்டில் இருந்த குசுமாசன தேவியை சிம்மாசனமேற்றி விமலதர்மசூரியனின் ஆட்சியை வீழ்த்துவதே போர்த்தக்கேயரின் நோக்கமாகும்.
  - ✓ இப்படையுடன் குசுமாசன தேவியும் அனுப்பப்பட்டாள்.
  - ✓ போர்த்துக்கேயப்படை செங்கடகலையை அண்மித்ததும் மன்னன் விமலதர்சூரியன் கடுகண்ணாவைக்கு அருகில் உள்ள தந்துரே எனும் இடத்தில் வைத்து அதனை முறியடித்தான்.
  - ✓ தளபதி சூசா கொள்ளப்பட்டான்.
  - ✓ குசுமாசன தேவியை போர்த்துக்கேயரிடமிருந்து விடுதித்து அவளை திருமணம் செய்துகொண்டான்.
  - ✓ இதன் மூலம் முதலாம் விமலதர்சூரியன் கண்டி இராச்சித்தின் சட்ட பூர்வ ஆட்சி உரிமையை பெற்றான்.

- ரோமன் கத்தேலிக்க சமயத்தைக் கை விட்டு பௌத்த சமயத்தை தழுவிக் கொண்டான்.

- விமலதர்மசூரிய என்ற பௌத்த நாமத்தை சூட்டிக்கொண்டான்.

- சீதாவக்கை தெல்கமுவ (இரத்தினபரி குருவிட) விகாரையில் இருந்த புனித தந்ததாதுவை கண்டியில் பிரதிஸ்டை செய்தான்.

## கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க மேற்கொண்ட வடவடிக்கைகள்

- போர்த்துக்கேயருடனான பல போர்களில் வெற்றி பெற்றமை.
    - ✓ தந்துரே, பலன
- கி.பி 1594 இல் தந்துரே போரில் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச் செய்தமை.
- போர்த்துக்கேயருக்கு எதிராக கரையோரப் பிரதேசங்களில் சுதேசிகளால் ஏற்படுத்தப்பட்ட கலவரங்களுக்கு உதவியளித்தமை.
- போர்துக்கேயரை கரையோரத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியை பெற்றுக்கொண்டமை.

## முதலாம் விமலதர்மசூரியனின் பௌத்த சமயப் பணிகள்

❖ பர்மாவில் இருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை மீண்டும் நடாத்தியமை.

❖ பழைய விகாரைகளை புனரமைப்பு செய்தமை.

✓ லங்காதிலக, கடலாதெனிய ஆகிய விகாரைகளைப் புனரமைத்தான்.

❖ சீதாவாக்கையின் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கண்டிக்கு எடுத்து வந்து தலதாமாளிகையில் பிரதிஸ்டை செய்தான்.

## முதலாம் விமலதர்மசூரியனின் பொருளாதாரப் பணிகள்

- விவசாயத்தை விருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுத்தமை.
  நெற்செய்கை மற்றும் பருத்தி பயிர்ச்செய்கைக்கு உதவி புரிந்தமை
  (கொத்மலை, வலபனை, ஹரிஸ்பத்து)
- கொத்மலையிலும் வலப்பனையிலும் இரும்பு உருக்குக் கைத்தெழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தமை.
  விவசாய உபகரணங்கள் செய்யப்பட்டமை.
  இரும்பை உருக்கும் 175 கொல்லன் பட்டறைகள் உருவாக்கப்பட்டமை
  (ஊவா பிரதேசத்தில்)
- வெடிமருந்திற்கு தேவையான உப்பு உற்பத்திக் கைத்தொழிலை வளர்த்தமை.
- கற்பிட்டித் துறைமுகத்தினூடாக தென்னிந்திய பகுதிகளுடன் வர்த்தக உறவை வளர்த்தமை.

❖ முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கடுமையான காய்ச்சல் ஒன்றினால் கி.பி 1604 ஆம் ஆண்டு மரணமடைந்தான்.

# செனரத் மன்னன் - (1604 – 1635)

- முதலாம் விமலதர்மசூரியன் மரணமடைந்த போது அவனது புதல்வர்கள் இளம் பராயத்தவர்களாக இருந்தனர்.
- முதலாம் விமலதர்மசூரியனின் பின் அவனது ஒன்று விட்ட சகோதரனான செனரத் கண்டி இராச்சியத்தின் மன்னனானான்.

### செனரத் எதிர்நோக்கிய சவால்கள்

- சட்ட பூர்வ ஆட்சி உரிமை இல்லாமை.
- கண்டி இராச்சியத்தை போர்த்தக்கேயரின் அச்சுருத்தலில் இருந்து பாதுகாக்க வேண்டி இருந்தமை.

### சட்ட பூர்வ ஆட்சி உரிமையை பெற்றுக்கொள்ளல்.

- ஆட்சிபீடமேறி சிறிது காலத்தினுள் குசுமாசன தேவியை மணந்து கொண்டான்.
- அதன் மூலம் சட்டரீதியான ஆட்சியுரிமையை பெற்றான்.

## செனரத்தின் காலம்

- குசுமாசனதேவிக்கும் முதலாம் விமலதர்மசூரியனுக்கும் இரு மகன்கள் இருந்தனர்.
- குசுமாசனதேவிக்கும் செனரத்திற்கும் ஒரு மகன் இருந்தான்.

- முதலாம் விமலதர்மசூரியன், குசுமாசனதேவி - குமாரசிங்க இளவரசன்
  - விஜேபால இளவரசன்
- செனரத், குசுமாசனதேவி - மகா ஆஸ்தான குமாரன் ( இரண்டாம் இராஜசிங்கன்)

- புதல்வர்களிடையே அதிகாரப் போரட்டத்தைத் தவிர்க்க கண்டி இராச்சியத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து அவர்களிடையே பகிர்த்தளித்தான்.

  ✓ ஊவா பிரதேசம் - குமாரசிங்க இளவரசன்
  ✓ மாத்தளைப் பிரதேசம் - விஜேபால இளவரசன்
  ✓ கண்டிப் பிரதேசம் - மகா ஆஸ்தான குமாரன் ( இரண்டாம் இராஜசிங்கன்)

- மன்னன் செனரத் யுத்தத்தைவிட சமாதானத்தை விரும்பினான்.
- 1617 இல் போர்த்துக்கேயருடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தான்.
- கி.பி 1630 ஆம் ஆண்டு போர்த்துக்கேய கப்டன் ஜெனரல் கொன்ஸ்தாந்தைன் டீ தசா பெரும் படை ஒன்றுடன் ஊவா பிரதேசத்தை ஆக்கிரமித்தான்.
- தந்தைக்கு உதவியாக போர் வீரனான இராஜசிங்கன் கண்டிப் படையை வழிநடத்தினான்.
- இராஜசிங்கனால் வழிநடத்திச் செல்லப்பட்ட போர்ப்படை பதுளைக்கு வந்தது.
- போர்த்துக்கேயருடன் வந்த சிங்களப் படைவீரர்கள் (லக்ஸரின் படை) அரசனின் படையோடு இணைந்து கொண்டனர்.
- போர்த்துக்கேயப்படை பின் வாங்க ஆரம்பித்தது.
- ரந்தெனிவெலையில் வைத்து போர்த்துக்கேயப்படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.
- கப்பித்தான் ஜெனரல் கொன்ஸ்தாந்தைன் டீ சாவும் கொல்லப்பட்டான்.
- இது ரந்தெனிவெல போர் எனப்பட்டது.

# இரண்டாம் இராஜசிங்கன் - (1635 – 1687)

- கி.பி 1635 இல் மன்னன் செனரத் மன்னன் மரணித்ததுடன் மகா ஆஸ்தான குமாரன் 2 ஆம் இராஜசிங்கன் எனும் பெயருடன் மன்னனானான்.

## இரண்டாம் இராஜசிங்கன் எதிர்நோக்கிய சவால்கள்

- கண்டி இராச்சியம் மீதான போர்த்தக்கேயர் தாக்குதல்களை எதிர்கொள்ளல்.
- போர்த்துக்கெயரை இந்நாட்டிலிருந்த வெளியேற்றல்.
- கண்டி இராச்சிய பிரபுக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புகளை கட்டுப்படுத்தல்.
- ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பிலிருந்து மலையக இராச்சியத்தை பாதுகாத்தல்.
- கி.பி 1638 இல் மன்னன் ஒல்லாந்தருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் நியதிகளை ஒல்லாந்தர் மீறியமை.

## இரண்டாம் இராஜசிங்கனின் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கை

- போர்துக்கேயருக்கு எதிரான கொள்கையை கடைபிடித்தான்.
- தான் இளவரசனாக இருந்த காலத்தில் கி.பி 1630 களில் ரந்தெனிவெலவில் கெப்டன் ஜெனரல் கொன்ஸ்தாந்தைன் டீ சா வின் படையுடன் மோதி வெற்றி பெற்றான்.
- கி.பி 1638 இல் தியோகுத மேலோ கஸ்ரோ எனும் போர்த்துக்கேய தளபதியின் கண்டி மீதான படையெடுப்பின் போது கன்னொருவ எனும் இடத்தில் இடம் பெற்ற போரை வெற்றிகொண்டான்.
- கி.பி 1638 -1658 ஆண்டுகளுக்கிடையில் ஒல்லாந்தரின் உதவியுடன் வெஸ்டர் வோல்ட் உடன்படிக்கையை ஏற்படுத்தி போர்த்தக்கேயரை முழுமையாக இந்நாட்டிலிருந்து வெளியெற்றினான்.

## இரண்டாம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான விரிசல்

- ஒல்லாந்தர் வெஸ்டர் வோல்ட் உடன்படிக்கையை மீறியதால் இரண்டாம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது.
- கி.பி 1665 - 1668 வரையான காலப்பகுதியில் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் சில பகுதிகளை கைப்பற்றினர்.
- இரண்டாம் இராஜசிங்கன் கி.பி 1670 - 1675 இடைப்பட்ட காலப்பகுதியில் ஒல்லாந்தருக்கு எதிராக பல தாக்குதல்களை நடாத்தி ஒல்லாந்தர் வசமருந்த பல பிரதேசங்களை மீட்டுக் கொண்டான்.
- இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தில் கண்டி இராச்சியத்தின் ஆட்சிப் பிரதேசம் விரிவடைந்தது.
- கற்பிட்டி, சிலாபம், திருகோணமலை, மட்டக்களப்பு, முதலிய துறைமுகங்கள் கண்டி இராச்சியத்திற்கு உரித்தானது.

❖ இராஜசிங்கனின் தாக்குதலால் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடன் ஒற்றுமையாக செயற்பட்டனர்.

சுமார் 50 வருட ஆட்சியின் பின் 1687 இல் மரணமடைந்தான்.

# இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் - (1687 – 1707)

- இரண்டாம் இராஜசிங்கனுக்கு பின்னர் அவனது புதல்வன் இரண்டாம் விமலதர்மசூரியன் எனும் பெயரில் 1687 இல் கண்டி இராசதானியில் மன்னனானான்.

## இரண்டாம் விமலதர்மசூரியனின் அரசியல் செயற்பாடுகள்

- மிகவும் அமைதியான மன்னனாக செயற்பட்டான்.
- அவனுடைய காலத்தில் கண்டி இராச்சியத்தின் பிரதானிகள் தமது அதிகாரங்களை பலப்படுத்திக் கொண்டனர்.
- ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டான்.
- தனது தந்தைக்காலத்தில் பரவலடைந்திருந்த கண்டி இராச்சிய பிரதேசத்தை பாதுகாக்க முனைப்பாக யெற்பட்டான்.

## இரண்டாம் விமலதர்மசூரியனின் சமயப்பணிகள்

❖ தளர்வுற்றிருந்த பௌத்த சமயத்தை புத்தெழுச்சிப் பெறச் செய்ய பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா சடங்கினை நடத்தினான்.

❖ கண்டி தலதா மாளிகையை மும்மாடிகள் கொண்டதாக விஸ்தரித்தான்.

கி.பி 1707 இல் மரணமடைந்தான்

# ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் - (1707 – 1739)

- இரண்டாம் விமலதர்மசூரியன் பின்னர் அவனது மகன் ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன் 1707 இல் கண்டி இராசதானியில் மன்னனானான்.

## ஸ்ரீ வீர பராக்கிர நரேந்திர சிங்கனின் அரசியல் செயற்பாடுகள்

- கண்டி இராச்சியத்தின் சிங்கள அரசப் பரம்பரையின் இறுதி மன்னனாவான்.
- அமைதியற்ற பலவீனமான ஆட்சியக இருந்தது.
- கண்டி பிரதானிகள் தமது அதிகாரங்களை மேலும் பலப்படுத்திக் கொண்டனர்.
- கறுவா புடைக்கும் தொழிலாளர்களின் கிளர்ச்சி இம்மன்னனுடைய ஆட்சி காலத்தில் இடம் பெற்றது.

சுமார் 32 வருடகால ஆட்சியின் பின்னர் 1739 இல் மரணமடைந்தான்.

### சிங்கள அரச பரம்பரை முடிவடையக் காரணம்

- ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் தன் தந்தையை போல் தென்னிந்திய இளவரசியை திருமணம் முடித்திருந்தான்.
- வாரிசுகள் இல்லாததால் தென்னிந்திய நாயக்கர் வம்சத்தின் வழக்கப்படி மனைவின் சகோதரனான ஸ்ரீ விஜய இராஜசிங்கனுக்கு ஆட்சியுரிமை உரித்தானது.

# நாயக்கர் அரச வம்ச ஆட்சி - (1739 – 1815)

## ஸ்ரீ விஜய இராஜசிங்கன் - (1739 – 1747)

- நாயக்கர் வதம்சத்தின் முதல் மன்னனாவான்.
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனின் மனைவியின் சகோதரனாவான்.

## ஸ்ரீ விஜய இராஜசிங்கன் எதிர்நோக்கிய சவால்கள்

- கண்டி அரச சபையில் பிரதானிகளின் அதிகார பலம் அதிகமாக காணப்பட்டமை.
- அதனை வெற்றி கொள்ள தனது உறவினர்களான நாயக்கர் வம்சத்தினருக்கு அரச பதவிகளை வழங்கினான்.

## ஸ்ரீ விஜய இராஜசிங்கனின் சமயப்பணிகள்

- பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டான்.
- நீண்டகாலம் பிக்குகளுடன் வாழ்த்தான்.
- வெலிவிட்ட சரணங்கர தேரரின் ஆலொசனைப்படி பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து உபசம்பதா விழாவினை நடாத்த நடவடிக்கை எடுத்த போதும் அது வெற்றியளிக்க வில்லை.
- தென்னிந்திய இளவரசியை திருமணம் முடித்தான்.

கி.பி 1747 இல் வாரிசசகள் இல்லாத நிலையில் இறந்தான்.

## கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் - (1747 – 1781)

- ஸ்ரீ விஜயராஜ சிங்கனுக்கு வாரிசுகள் இல்லாததால் அவனின் மனைவியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மன்னனானான்.
- ஆட்சிக்கு வரும் போது பதினாறே வயதான படியால் அவனின் தந்தையாகிய நரேனப்ப நாயக்கன் என்பவன் ஆட்சியில் தலையீடு செய்ததாக கூறப்படுகிறது.
- ஆட்சிக்கு வரும் போது பௌத்த சமயம் பொலிவற்று காணப்பட்டது.

### கீர்த்தி ஸ்ரீ இராசிங்கனின் சமயப்பணிகள்

- வெலிவிட்ட சரணங்கர தேரரின் வழிகாட்டலின் படி செயற்பட்டான்.
- சீயம் நாட்டிற்கு தூதுக் குழு ஒன்றை அனுப்பி உபாலி தேரர் உட்பட இன்னும் பல பிக்குகளை அழைத்து கி.பி 1753 இல் உபசம்பதா நிகழ்வினை நடத்தினான்.
- சீயம் நிகாய இந்நாட்டில் ஆரம்பமானது.
- கண்டியிலும் தாழ் நாட்டிலும் காணப்பட்ட விகாரைகளை புணரமைத்தான். உ.ம் - தம்புள்ளை விகாரை
- வெலிவிட்ட சரணங்கர தேரருக்கு சங்கராஜ பதவியை வழங்கி கௌரவித்தான்.
- வருடாந்த தலதா பெரஹெராவை நடாத்த உதவி புரிந்தான்.
- வருடாந்த பெரஹெராவை தேவாலயங்கலோடு இணைத்து கோலகலமாக நடத்தினான்.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் கல்வி, சமய நடவடிக்கைகளுக்கு உதவியளித்தான்.
- விகாரைகளை கொண்டு நடாத்த நிலபுலன்களை வழங்கினான்.

## கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் ஐரோப்பியருக்கும் இடையிலான தொடர்புகள்

### ஒல்லாந்தருடனான தொடர்பு

- இலங்கையின் கரையோரத்தில் ஒல்லாந்தரின் ஆதிக்கம் நிலவியது.
- ஒல்லாந்தரை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் கி.பி 1760 - 1765 காலப்பகுதியில் பல போர்கள் நடைபெற்றன.
- நீண்ட கால சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் கி.பி 1766 இல் ஒப்பந்தமொன்று கைச்சாத்திப்பட்டது.
- கி.பி 1766 ஒப்பத்தப்படி கண்டி இராச்சியத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பல கரையோரப் பிரதேசங்களை கண்டி இராசதானி இழந்தது.

### 1766 ஆம் ஆண்டு ஒல்லாந்தருடனான ஒப்பந்தம்

- இலங்கையின் கரையோரப் பிரதேசத்தினைக் கைப்பற்றுதல்.
- கண்டி இராச்சியம் வெளி நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளையும் துண்டித்தல் ஆகிய விருப்பங்களைப் ஒல்லாந்தர் பூர்த்தி செய்து கொண்டனர்.
    - ❖ ஆனாலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்களை ஒல்லாந்தர் பூர்த்தி செய்யவில்லை.

### ஆங்கிலேயருடனான தொடர்பு

- கரையோரப் பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தரை வெளியேற்ற ஆங்கிலேயரின் உதவியை பெற முயற்றான்.
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் வேண்டுகோளின் படி பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் பிரதிநிதியான ஜோன் பைபஸ் கி.பி 1762 இல் மன்னனை சந்திதான்.
- இச்சந்திப்பினால் சாதகமான விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை.

### ஜோன் பைபஸின் தூதுப் பயணம் சாதக விளைவு ஏற்படாமைக்கான காரணம்

- மன்னனின் நோக்கம் ஒல்லாந்தரை வெளியெற்றுவதாகவும் ஜோன் பைபஸின் நோக்கம் வர்த்தக பொருட்களை பெற்றுக்கொள்வதுமாக காணப்பட்டமை.

சுமார் 34 வருட அட்சியின் பின்னர் வாரிசுகள் அல்லாத நிலையில் கி.பி 1781 இல் மரணமடைந்தான்.

# இராஜாதி இராஜசிங்க மன்னன் - (1781 – 1798)

- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் பின்னர் அவனின் சகோதரனான இராஜாதி இராஜசிங்கன் மன்னனானார்.
- இந்து சமயத்தவனாக இருந்த போதும் பௌத்த மதத்தின்பால் பற்றுள்ளுவனாக இருந்தான்.

**இராஜாதி இராஜசிங்கனின் அரசியல் செயற்பாடுகள்**

- மன்னனுக்கும் கண்டி பிரதானிகளுக்கும் அபிப்பிராய போதங்கள் ஏற்பட்டன.

**இராஜாதி இராஜசிங்கனின் ஆங்கிலேயருடனான தொடர்பு**

- கி.பி 1782 இல் பிரித்தானிய தூதுவன் ஹியு பொயிட் மன்னனை சந்தித்து ஒல்லாந்தரை வெளியேற்ற உதவுவதாக வாக்குறுதியளித்தான்.
- கி.பி 1795 இல் பிரித்தானிய நிர்வாக அதிகாரியான பொபட் அன்ட்றூஸ் மன்னனை சந்தித்த ஒல்லாந்தரை வெளியேற்ற உதவுவதாக வாக்குறுதியளித்தான்.
- கி.பி 1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையொரப் பிரதேசங்களை கைப்பற்றினர்.

கி.பி 1798 வரிசுகள் இல்லாத நிலையில் மரணமடைந்தான.

# ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் - (1798 – 1715)

- இராஜாதி இராஜசிங்க மன்னனின் பின் கண்டி இராச்சிய அரசுரிமைக்காக கண்ணுச்சாமி, முத்துச்சாமி என இருவர் போட்டியிட்டனர்.
- இதில் கண்ணுச்சாமிக்கு அப்போதைய கண்டிப் பிரதம பிரதானி பிலிமத்தலாவயின் ஆதரவு கிடைத்தது.
- அதன்படி இளவரசன் கண்ணுச்சாமி 1798 ஆம் ஆண்டில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்னும் பெயருடன் கண்டி இராச்சியத்தின் அரசனானான்.
- இளவரசன் முத்துச்சாமி பாதுகாப்புக் கருதி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தான்.
- பிலிமத்தலாவை, ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் எனக் கருதினார்.
- ஆனாலும் மன்னன் ஆரம்பத்தில் பிலிமத்தலாவையின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டாலும், பின் நாயக்க வம்ச உறவினர்களிற்குக் கட்டுப்பட்டு நடந்தான்.
- இதனால் மன்னனுக்கும் பிலிமத்தலாவைக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.
- பிலிமத்தலாவ ஆங்கிலேயரின் உதவியைப் பெற்று மன்னனுக்கு எதிராகச் செயற்படும் முயற்சியில் ஈடுபட்டாலும் அது தோல்வி அடைந்தது.

**ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆங்கிலேயருடனான தொடர்பு**

- கண்டி இராச்சியத்தை ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் ஆட்சி செய்யும் போது இலங்கையின் கரையோரத்தில் பிரித்தானியரின் முதலாவது ஆளுனரான பிரட்றிக் நோர்த் ஆட்சி செய்தார்.
  - ஆளுனர் நோர்த்திற்கு
    கண்டி இராச்சியத்தின் போர் பலம், போர் முறைகள் பற்றி போதிய அறிவு இருக்கவில்லை.
- 1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்த பிரட்ரிக் நோர்த் தமது பாதுகாப்பில் இருந்த முத்துச்சாமியை கண்டியின் அரசனாகப் பிரகடனப்படுத்தினார்.
- எனினும் பொது மக்களுடைய ஆதரவு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனுக்குக் கிடைத்தமையால் அவ் ஆக்கிரமிப்பு வெற்றி பெறவில்லை.
- மீண்டும் ஆட்சியைப் பெற்ற ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் முத்துச்சாமிக்கு மரண தண்டனை விதித்தான்.

**ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் சேவைகள்**

- தலதாமாளிகைக்கு மனங்கவரும் பத்திரிப்பு என அழைக்கப்படும் எண்கோண மண்டபத்தினைக் கட்டினான்.
- தலதா மாளிகைக்கு முன்னால் பாற்கடல் என அழைக்கப்படும் தடாகத்தை நிர்மாணித்தான்.

# பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குக் ஏதுவாக அமைந்த மன்னன் சார்பான காரணிகள்

## ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் இறுதிக் காலத்தில் கண்டி இராச்சியத்தில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகள்

- மன்னனுக்கும் பிரதானிகளுக்கும் முரண்பாடு ஏற்பட்டமை.
    - ஐரோப்பியர்களின் கண்டி ஆக்கிரமிப்புக்களின் போது மக்களை ஒன்று திரட்டி அரசையும் அரசனையும் பாதுகாத்தது பிரதானிகளே ஆவர்.
    - தன்னை மன்னனாக்கிய பிரதம பிரதானி பிலிமைதலாவைக்கும் மன்னனுக்கும் இடையில் மேதல்கள் உருவாகின.
    - பிலிமைதலாவைக்கு மரண தண்டனை விதித்தான்.
    - கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானியான எஹலப் பொலவிற்கும் மன்னனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.
    - மன்னனுக்கு எதிராக சப்ரகமுவ பிரதேசத்தில் கலவரங்கள் ஏற்பட்டன.
    - கலவரத்தின் போது எஹலபொலவை கைது செய்ய முடியாமல் போனது.
    - எஹலப்பொல ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்திருந்தான்.
    - எஹலபொலவின் மனைவி மக்களுக்கு கொடூரமான முறையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

- மன்னனுக்கும் குடிமக்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டமை.
    - போகம்பர வாவியை விஸ்த்தரித்தல், பத்திரிப்புவை கட்டுதல் போன்ற கண்டி நகரை அலங்கரிக்கும் அரச பணிகளில் சப்ரகமுவ, நான்கு கோரளை, ஏழு கோரளை ஆகிய பிரதேச மக்கள் ஈடுபட்டனர்.
    - அம் மக்கள் இரவு வேளைகளில் கண்டி நகரில் தங்குவதற்கு மன்னன் தடை விதித்தான்.
    - இதனால் இம்மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர்.

- மன்னனுக்கும் பிக்குமாருக்கும் முரண்பாடு ஏற்பட்டமை.
    - பல பிக்குமார்கள் கொலை செய்யப்பட்டனர்.
    - இதனால் பிக்குமார் மன்னன் மீது வெறுப்பு கொண்டனர்.

கண்டி இராச்சியத்தில் மன்னனுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது.

# பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுதல்

- ஆங்கிலேய ஆளுனர் ரொபட் பிரவுண்றிக் 1815 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்தான்.
- ஆங்கிலேயருக்கு எஹலப் பொலைவின் உதவி கிடைத்தது.
- மன்னன் ஆட்சியில் அதிருப்தி அடைந்திருந்த மக்கள் ஆங்கிலேயர் கண்டிக்கு வருவதனைத் தடுக்கவில்லை.
- இதனால் தடைகள் இன்றிக் கண்டி இராச்சியத்தினுள் ஆங்கிலேயர் பிரவேசித்தனர்.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அரண்மனையை விட்டு மெதமகாநுவரைக்கு சென்று வீடு ஒன்றில் ஒழித்திருந்தான்.
- கண்டி இராச்சிய மக்கள் 1815 ஆம் ஆண்டு பெப்பிரவரி 18 ஆம் திகதி மன்னனையும் மகாராணியையும் கைது செய்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.
- ஆங்கிலேயரின் கைதியாக இருந்த மன்னன் இந்தியாவின் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான்.

வேலூர் சிறைச்சாலையில் வைத்து மன்னன் உயிர் இழந்தான்.

- இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களால் கைப்பற்ற முடியாதிருந்த கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தமைக்கு மக்களின் உதவியே காரணமாக அமைந்திருந்தது.

# கண்டி ஒப்பந்தம்

- " கண்டி ஒப்பந்தம்" 1815 மார்ச் 2 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.
- ஒப்பந்தத்தின் படி கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாக மாறியது.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் உட்பட நாயக்க வம்சத்தினருக்கு கண்டி இராச்சியத்தின் மீது இருந்த உரிமைகள் இல்லாது செய்யப்பட்டன.
- கண்டி இராச்சியத்தின் சுதந்திரம் இல்லாது போனது.
- முழு இலங்கைத் தீவும் பிரித்தானியரின் குடியேற்ற நாடாக மாறியது.

# கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

- கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பில் முதன்மை நபராக விளங்கியவன் மன்னனாவான்.
- மன்னனுக்கு உதவுவதற்கு பிரதானிகள் இருவர் இருந்தனர்.
- பிரதானிகள் அரசனுக்கு அடுத்தப்படியாக அரசியல் அந்தஸ்தை பெற்றிருந்தனர்.
- அரசின் முக்கிய விடயங்களை கலந்துரையாடுவதற்கு அரச சபை ஒன்று இருந்தது.
- அரச சபை அரசனின் தலைமையில் கூட்டப்பட்டது.
- அரச சபை கூடும் போது
  - ✓ பிரதானிகள்
  - ✓ திஸாவைகள்
  - ✓ தலைமைச் செயலாளர்
  - ✓ பிரதேச செயலாளர்கள் ஆகியோர் சமுகமளித்தனர்.
- அரசனின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அரச மாளிகை சேவைகள் காணப்பட்டன.
- அரசனின் மேற்பார்வையின் கீழ் ரட்டவசம எனும் பிரதேசங்கள் பிரதம பிரதானிகளால் நிர்வகிக்கப்பட்டனர்.

### பிரதானிகளின் கீழ் வரி வசூழிக்கும் பிரிவுகள்

- ✓ விகாரை
- ✓ தேவாலயங்கள்
- ✓ நிர்வாகம்

# அரசனின் அதிகாரங்கள்

- நாட்டின் உயர் அதிகாரம் அரசனுக்கே உரியது.
- நாட்டின் அமைதியை பேணுவதும் பாதுகாப்பை வழங்குவதும் அரசனின் பிரதான செயற்பாடாகும்.
- சம்பிரதாயப் பூர்வமான, முன்னைய நடைமுறைகளுக்கு அமைவாக மன்னன் செயற்பட வேண்டி இருந்தது.
- நாட்டின் உயர் நீதித்தறை அதிகாரம் மன்னனிடமே காணப்பட்டது.
- குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் மன்னனுக்கு மட்டுமே இருந்தது.
- நாட்டின் அனைத்து அரசியல் கருமங்களும் பொருளாதார செயற்பாடுகளும் நிர்வாகப் பணிகளும் அரசனைத் தலைமையாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டன.

# பிரதானிகள்

- பிரதம பிரதானி, இரண்டாவது பிரதானி என இரு பதவிகள் இருந்தன.

பிரதம பிரதானி - பல்லேகம்பா பிரதானி (மகா அதிகாரம்)
இரண்டாவது பிரதானி - உடகம்பா பிரதானி (இரண்டாம் அதிகாரம்)

### பிரதானிகளால் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்கள்

| மகா அதிகாரம் | இரண்டாவது அதிகாரம் |
|---|---|
| மகா கோரளை | நான்கு கோரளை |
| ஊவா | மூன்று கோரளை |
| மாத்தளை | சப்ரகமுவ |
| வலப்பனை | ஊவா பிரதேசம் |
| பிந்தென்ன | உடுநுவர, யட்டிநுவர |
| வெல்லஸ்ஸ | தும்பனே |
| நுவர கலாவிய | புலத்கம, கொத்மலை |

**கடுபுள்ளே**

- பிரதானிகளின் கட்டளைகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்களாவர்.
- வெள்ளிப் பூண் இடப்பட்ட, வளைந்த பிரம்பு ஒன்று அவர்களின் பதவியின் அடையாளமாகும்.

## மாளிகை (மஹவாசலை) க்கு பொறுப்பான அதிகாரிகள்

- அரச பதவியின் கம்பீரத்தை பேணிக்கொண்டு அரசமாளிகை செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக இவ்வதிகாரிகளிடம் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன.
- அரச மாளிகைகளுக்கு
  - ✓ உணவு
  - ✓ குடிபானம்
  - ✓ உடை
  - ✓ ஆபரணங்கள்
  - ✓ பாவனைப் பொருட்கள் என்பவற்றை வழங்குவது அவர்களின் பொறுப்பாகும்.
- மன்னனின் நேரடி கட்டுப்பாட்டில் இவர்கள் இயங்கினர்.
- அவர்கள் நிலமே மார் மற்றும் முகாந்திரம் மார் என அழைக்கப்பட்டனர்.
- இவர்களுள் பிரதம செயலாளர், களஞ்சியசாலை பொறுப்பாளர் ஆகியோர் இருந்தனர்.

**நிலமே மார்**

- கஜநாயக்க நிலமே - யானைகளுக்குப் பொறுப்பானவர்
- தியவடன நிலமே - புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பானவர்
- சலுவடன நிலமே - ஆடையணிகளுக்குப் பொறுப்பானவர்
- பத்வடன நிலமே - உணவு வழங்களுக்குப் பொறுப்பானவர்

**முகாந்திரம் மார்**

- குதிரைலாய முகாந்திரம்.
- கவியரங்கிற்குப் பொறுப்பான முகாந்திரம்.

## ரட்டவசம் எனும் பிரதேச நிர்வாகம்

- கண்டி இராச்சியம் ரட்ட, திஸாவை என்று 21 பிரிவுகளால் ஆனதாகும்.

- **ரட்டைகள்**
- இவை கண்டி நகருக்கு அருகாமையில் இருந்த பிரதேசங்களாகும்.
  - ✓ உடுநுவர
  - ✓ யடிநுவர
  - ✓ தும்பனை
  - ✓ ஹரிஸ்பத்துவ
  - ✓ தும்பர
  - ✓ ஹேவாஹெட்ட
  - ✓ கொத்மலை
  - ✓ உட புலத்கம
  - ✓ பாத புலத்கம
- ரட்ட எனும் பிரதேசங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் ரட்டே ரால அல்லது ரட்டே மஹாத்தயா எனப்பட்டனர்.
- ரட்டே ராலவிற்கு கீழ் லியனரால, உண்டிய ரால ஆகியோரும் சிறு அதிகாரிகள் பலரும் இருந்தனர்.

- **திஸாவைகள்**
  - ✓ நான்கு கோரளை
  - ✓ மூன்று கோரளை
  - ✓ ஊவா
  - ✓ சப்ரகமுவ
  - ✓ மாத்தளை
  - ✓ வலப்பனை
- இப்பிரதேசங்களினுள் 12 திஸாவைகள் இருந்தன.
- திஸாவைகளுக்குப் பொறுப்பானவர்கள் திஸாவைகள் எனப்பட்டனர்.

- **கோறளைகளும் பற்றக்களும்**
- திஸாவைகள் கோறளைகளாகவும் கோறளைகள் பற்றக்களாகவும் பிரிக்கப்பட்டன.
- கோறளைக்குப் பொறுப்பான அதிகாரிகள் கோறளைகள் எனப்பட்டனர்.
- கோறளையில் ஒவ்வொரு குலத்தவருக்கும் ஒவ்வொரு முகாந்திரங்கள் இருந்தனர்.
- முகாந்திரங்களின் கீழ் ஒவ்வொரு கிராமத்தின் ஒழுங்குக்கும் பொறுப்பான விதானைகள் இருந்தனர்.

## வரி (பத்தே) வசூலித்தல்

- கண்டி இராச்சியத்தில் அரசியல் ரீதியாக அமைந்த பிரந்திய நிர்வாகத்திற்கு மேலதிகமாக திஸாவைகளில் வாழ்ந்த தொழில் அல்லது குலத்தின் அடிப்படையிலான தனியான அமைப்புக்களும் காணப்பட்டன.
- ஆரம்பக்காலங்களில் கண்டி இராச்சியத்தின் வரி அமைப்பு தனியாக செயற்பட்டது.
- கண்டி இராச்சியத்தின் இறுதிக் காலத்தில் வரி அமைப்பு திஸாவை மாரின் கீழ் செயற்பட்டது.

- **கண்டி இராச்சியத்தின் வரி வசூழிப்புப் பிரிவுகள்**
  - மடிகே பத்த - போக்குவரத்திற்கான வரி
  - குருவே பத்த - யானை பிடித்தலுக்கான வரி
  - படஹெல பத்த - வனைதலுக்கான வரி
  - ரதா பத்த - சலவைக்கான வரி
  - ஹெந்த பத்த - நெசவுக்கான வரி

## விகாரைகள், தேவாலயங்களின் நிர்வாகம்

- விகாரைகளின் நிர்வாகம் மஹாநாயக்க மற்றும் அனு மஹாநாயக்க என்போரின் கீழ் செயற்பட்டது.
- தலதா மாளிகையின் நிர்வாகம் தியவடன நிலமேயின் கீழ் இருந்தது.
- விகாரைகள், தேவாலயங்கள் என்பவற்றைப் பரிபாலித்தல், பூஜைகள், பெரஹெராக்களை நடாத்துதல் என்பவற்றிற்கு கிராமத் தலைவர்கள் இராஜகாரிய முறையில் தமது சேவைகளை வழங்கினர்.

## நீதிமன்றச் செயற்பாடுகள்

- உயர் நீதி அதிகாரம் மன்னனக்கே உரியது.
- ஒவ்வொரு உத்தியொகஸ்தருக்கும் அவரவர் உத்தியோகத்திற்கு அமைவாக நீதி அதிகாரங்கள் காணப்பட்டன.

## மன்னனால் மட்டும் விசாரிக்கப்பட்ட வழக்குகள்

- முக்கிய தலைவர்கள் தொடர்பான வழக்குகள்.
- கிளர்ச்சிகள், குழப்பங்கள் தொடர்பான வழக்குகள்.
- சூழ்ச்சிகள் தொடர்பான வழக்குகள்.
- இராஜ துரோகத்துடன் தொடர்புடைய வழக்குகள்.
- விகாரைகள், பிக்குகள் தொடர்பான வழக்குகள்.

## கண்டி இராச்சியக் காலத்தில் குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள்

- கன்னத்தில் அறைதல்.
- விலங்கிடுதல்.
- முழந்தாழிடச் செய்தல்.
- முடியை கத்தரித்தல்.
- தென்னை மட்டையால் அடித்தல்.
- துர்நாற்றத்தின் மத்தியில் நிற்க்க வைத்தல்.
- கசையால் அடித்தல்.
- கீழ் குலத்தவராக்குதல்.
- நாடுகடத்தல்.
- நீரில் மூழ்கடித்துக் கொல்லுதல்.
- யானையால் மிதித்துக் கொல்லுதல்

# கண்டி இராச்சியத்தின் பொருளாதார முறை

- கண்டி இராச்சியத்தின் பொருளாதாரமானது
  - ✓ விவசாயம்
  - ✓ வர்த்தகம்
  - ✓ கைத்தொழில் ஆகிய மூன்று துறைகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது.
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரமாக காணப்பட்டது.

## விவசாயம்

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை காணப்பட்டது.
- கண்டி இராச்சிய காலத்தில் ஈரவலயப் பிரதேசங்களில் வேகமான சனத்தொகை வளர்ச்சி காணப்பட்டது.
- அதிகரிக்கும் சனத்தொகைக்கேற்ப விவசாய உற்பத்தயை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது.
- இரு பருவக் காற்றுக்கள் மூலமும் வருடம் முழுவதும் இப்பிரதேசத்தில் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றது.
- மழை நீரினைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- உயர் மலைப்பிரதேசங்களில் படிக்கட்டு முறையில் அமைக்கப்பட்ட வயல்களில் பயிரிடுவது பொதுவான தன்மையாக காணப்பட்டது.
- தாழ்நிலப் பிரதேசங்களிலும் மழை வீழ்ச்சியைப் பயன்படுத்தி நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

## சேனைப் பயிர்ச்செய்கை

- பெருமளவான நிலங்கள் சேனைப் பயிர்ச்செய்கைக்கே பயன்படத்தப்பட்டன.

### சேனைகளில் பயிரிடப்பட்ட பயிர்கள்

- குரக்கன்
- எள்
- திணை
- சோளம்
- சாமை

### வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டவை

- பலாக்காய்
- கிழங்கு வகை
- பழவகைகள்
- மிளகு
- சாதிக்காய்
- ஈரப்பலாக்காய்
- மரக்கறிகள்
- பாக்கு
- ஏலம்
- கராம்பு

## மந்தை வளர்ப்பு

- பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவும், விவசாயம் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகவும் மாடுகள் வளர்க்கப்பட்டன.

## கைத்தொழில்கள்

- நாட்டிற்கு தேவைக்கான கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் எமது நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளப்பட்டன.
- குலத்தை அடிப்படையாகக் கொண்ட பரம்பரை பரம்பரையாக குறித்த தொழிலில் ஈடுபடுவோர் இருந்தனர்.

### உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்

- களிமன் பொருட்கள்
- செம்பு உற்பத்தி
- பித்தளை உற்பத்தி
- இரும்பு உற்பத்தி
- மர வேலைகள்
- அரக்கு தொழில்
- பன் புல் தொழில்

- கைத்தொழில்களின் அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் உருவாகின.

### • கைத்தொழில்களும் உற்பத்திகளுக்கு பிரசித்திப் பெற்ற இடங்கள்

- கொத்மலைப் பிரதேசம் - இரும்பு உற்பத்தி
- கிரிவாவுலப் பிரதேசம் - செம்பு உற்பத்தி
- தும்பறைப் பிரதேசம் - பன் புல்லினால் இழைக்கும் பொருட்கள்

# கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பு

- நாட்டின் நிலம் இனைத்தும் அரசனுக்கே உரியது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.
- உரிமையையும் அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு நிலங்கள் வகைப் படுத்தப்பட்டடிருந்தன.

  கபாடகம் - அரச மாளிகையின் தேவைக்காக பயன்படுத்தப்பட்டவை.
  நிந்தகம் - பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை.
  தேவாலயம் - தேவாலயங்களுக்கு தானமளிக்கப்பட்டவை.
  விகாரகம் - விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்டவை.
  பரவேனிகம் - கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்தவை.
- மக்கள் தான் அனுபவிக்கும் நிலத்திற்காக ஏதாவது ஒரு சேவையை அல்லது குறிப்பிட்ட தொகைப் பொருளை மன்னருக்கு வழங்க வேண்டும்.
- பொதுமக்களால் வழங்கப்பட்ட சேவை ராஜகாரியம் (கட்டாய அரச சேவை) எனப்பட்டது.

## கண்டி இராச்சிய சமூகக் கட்டமைப்பு

- கிராமிய சமூக அமைப்பே காணப்பட்டது.
- கிராமத்தில் பிரதான அலகாக குடும்பம் காணப்பட்டது
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை காணப்பட்டது.
- தொழில் பிரிவினர், குலங்களுக்கு எனக் வெவ்வேறான கிராமங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- கிராமத்தில் மக்களிடையே நல்லுறவு காணப்பட்டது.
- ஒன்று பட்ட புரிந்துணர்வுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு நிலவியது.

### சமூகத்தில்

- மதகுருமார்
- பிரபுக்கள்
- குடிமக்கள் என மூன்று வகுப்புக்கள் பிரிவுகள் காணப்பட்டன.

### மதகுருமார்

- கிராமிய மக்களின் வாழ்க்கையிளிருந்து பிரிக்க முடியாத ஒன்றாக விகாரைகள் காணப்பட்டன.
- விகாரைகளில் வாழ்ந்த பிக்குகள் கிராமத்தில் முதன்மைப்பொற்றனர்.

### பிரபுக்கள்

- பிரப்புக்கள் சமூகத்தில் முக்கியமான சக்தியாக இருந்தனர்.
- அரசனைத் தவிர நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பிரதானிகள் ஆவர்.
- பிரதானிகள் பிரபுக்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

### குடிமக்கள்

- குடிமக்களில் அதிகமானவர் விவசாயிகளாவர்.
  சாதாரண மக்களில்
  - ✓ விவசாயிகள்
  - ✓ தொழிலாளர்கள்
  - ✓ வியாபாரிகள் போன்றோர் உள்ளடங்குவர்.
- கண்டி சமூகத்தில் குடும்ப அலகு மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது.
- தந்தையின் பின் சொத்துக்கள் பிள்ளைகளுக்குச் சொந்தமாகின.
- தந்தையை முதன்மையாகக் கொண்ட தந்தை வழிச் சமூகம் காணப்பட்டது.

- கிராமிய சமூகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் உழைப்புப் பரிமாற்றம் ( அத்தம் முறை) மூலம் இடம் பெற்றது.

# கண்டி சமூகத்தின் திருமண முறைகள்

- கண்டி சமூகத்தில் திருமணம் தத்தமது குலத்தவரிடையே இடம் பெற்றது.

## திருமணம் முறைகள்

### தீக திருமணம்

- மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே வாழ்வது.

### பின்ன திருமணம்

- மணமகன் மணமகளின் வீட்டில் தங்கியிருந்து வாழ்வது.

### ஒரே வீட்டில் சாப்பிடுதல் அல்லது பல புருஷ திருமணம்

- சகோதரர்கள் சிலர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழும் முறை ஆகும்.
- இம்முறை மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது.
- விவசாய சமூகத்தில் சொத்துக்கள் பிரிக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்கு இவ்வாறான திருமண முறை வழக்கத்திலிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

# கண்டி இராச்சிய மன்னர்கள்

### கோட்டை அரச பரம்பரை
(கோட்டை மன்னரின் இரத்த உறவுகள்)

- சேனா சம்மத விக்கிரம பாகு
- ஜயவிர பண்டாரன்
- கரலியத்த பண்டாரன்
- முதலாம் இராஜசிங்கன்
- யமசிங்க பண்டாரன்

### தினராஜ அரச வம்சம்
(பேராதனை)

- முதலாம் விமலதர்சூரியன்
- சேனரத்
- இரண்டாம் இராஜசிங்கன்
- இரண்டாம் விமலதர்மசூரியன்
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்

### நாயக்கர் அரச வம்சம்
(தென்னிந்தியா, மதுரை)

- ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
- இராஜதி இராஜசிங்கன்
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

